
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 டிசம்பர் 21, 2024 Weekly E-paper ● December 21, 2024



# இது அநாகரிகம், அத்துமீறல்!

சுப. வீரபாண்டியன்

## அமித்ஷாவின் குரல் அல்ல, ஆர்.எஸ்.எஸ்.-இன் குரல்

திருப்பூர் மகிழவன்

## பெரியாரே தீர்வு..!

தலையங்கம்

## மாநில உரிமை இறுதிப் பேருரையின் மையப் புள்ளி

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 டிசம்பர் 21, 2024 Weekly E-paper • December 21, 2024


# இது அநாகரிகம், அத்துமீறல்!

சுப. வீரபாண்டியன்



எப்படி வருகிறது இந்தத் துணிச்சல்?

ஏன் தமிழ்நாட்டில் பொதுவெளிகளும், மேடைகளும் இவ்வளவு அநாகரிகமான சொற்களைத் தாங்கி நிற்கின்றன?

குழப்பமாகவும் வேதனையாகவும் தான் இருக்கிறது. அண்மையில், பா.ம.கவைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அருள் பொது மக்களிடம் பேசியுள்ள சில சொற்களின் அடிப்படையில்தான் இந்தக் கேள்விகள் எழுகின்றன.

ஓமலூர் அருகில் உள்ள ஒரு கோயில் தொடர்பாக, இரண்டு குழுக்களுக்குள் ஏற்பட்ட சிக்கலைத் தீர்த்து வைப்பதற்காக அங்கே போன அருள், அதனை மேலும் பெரிய சிக்கலாக்கி விட்டுத் திரும்பி இருக்கிறார்.

அந்த இரண்டு குழுக்களில் ஒரு குழுவில், முழுவதும் பெண்கள் மட்டுமே இருந்துள்ளனர். அதனைக் கண்டு, தேவையற்றுக் கோபப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர் அவர்களைப் பார்த்து, "எங்க உங்க வீட்டு ஆம்பளைங்க எல்லாம்" என்று கேட்டிருக்கிறார். அந்த கேள்வியில் பிழை இல்லை. ஆனால், அடுத்து அவர்களைப் பார்த்து, "ஏன் உங்க வீட்டு ஆம்பளைங்க எல்லாம் பொட்டைங்களா?" என்று கேட்கிறார்.

அந்தக் காணொளியைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. இப்படியெல்லாம் கூடவா பொது வெளியில் பேசுவார்கள்? அது என்ன பொட்டைகள் என்ற சொல் ....! எதற்காக அந்த இடத்தில் அது பயன்படுத்தப்பட்டிருக்கிறது?



"ஆம்பளைங்க எல்லாம் வீட்ல சமைச்சுக்கிட்டும் துவைச்சுக்கிட்டும் இருக்காங்களா? ஒரு முக்கியமான முடிவு எடுக்கிற இடத்துல ஆம்பளைங்க வேண்டாமா?" என்றெல்லாம் அவர் கேட்கிறார்.

அத்தனை கேள்விகளும் அபத்தமாகவும், அநாகரிகமாகவும், அத்துமீறலாகவும் உள்ளன. ஆண்கள் வீட்டில் சமைக்கவும், துவைக்கவும் கூடாதா? அல்லது எந்த ஒரு முக்கியமான முடிவையும் பெண்கள் எடுக்கக் கூடாதா? எந்தக் காலத்தில், எந்த நூற்றாண்டில் வாழ்கிறார் சட்டமன்ற உறுப்பினர் அருள் என்று நமக்குத் தெரியவில்லை!

இன்றைக்கு அது அங்கு ஒரு பெரிய சிக்கலாக ஆகியிருக்கிறது. நாம் சந்திக்க வேண்டிய பிரச்சனைகள் எத்தனையோ இருக்கின்றன. எல்லாவற்றையும் விட்டுவிட்டு, இப்படி ஒரு புதிய பிரச்சனை தேவையற்று உருவாக்கப்பட்டிருக்கிறது!

பொதுவெளியில் பெண்களை இப்படி அவமானப்படுத்த யாருக்கும் உரிமை இல்லை! பாலினச் சமத்துவம் என்னும் கோரிக்கை வலுப்பெற்று வரும் இன்றைய உலகில், மீண்டும் பெண்களை அடிமைகளாக ஆக்க முயற்சி செய்யும் இந்த அநாகரிகப் போக்குகள் தடுக்கப்படவும், தண்டிக்கப்படவும் வேண்டும்!

சட்டமன்ற உறுப்பினர் அருள் பொதுவெளியில் மன்னிப்பு கோருவவதுதான் குறைந்தபட்ச நாகரிகம்!

அவர் அப்படிச் செய்ய வேண்டும் என்றும், இல்லையெனில் அதனை அவர் சார்ந்திருக்கும் கட்சியின் தலைமை வலியுறுத்த வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறோம்! ●

# அமித்ஷாவின் குரல் அல்ல, ஆர்.எஸ்.எஸ்.-இன் குரல்

திருப்பூர் மகிழவன்

புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களைப் பற்றி நாடே பேசுகிறது என்பதை சாவர்க்கரின் வாரிசுகளால் எப்படி பொறுத்துக் கொள்ளமுடியும்? அம்பேத்கர் மீதான அவர்களது கொடூரமான காழ்ப்புணர்ச்சியை உள்துறை அமைச்சர் அமிர்ஷா கடந்த 17ஆம் தேதி நாடாளுமன்றத்தில் பேசுகையில் வெளிப்படுத்தி இருக்கிறார். அதுவும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 75 ஆம் ஆண்டில் அரசியலமைப்பு சட்டத்தைப் பெருமைப்படுத்துவதாகச் சொல்லிக் கொள்ளப்பட்ட விவாதத்தில் நாடாளுமன்றத்தில் பேசிய அமித்ஷா “எதற்கெடுத்தாலும் அம்பேத்கர், அம்பேத்கர், அம்பேத்கர் என்று இப்போதெல்லாம் பேசுவது ஒரு “பேஷனாகி” (Fashion) விட்டது. அத்தனை தடவை அவர்கள் அதனை சொல்வதைவிட




கடவுள் என்று சொல்லிக் கொண்டே இருந்தால், சொர்க்கமாவது கிடைக்கும்” என்று பேசியுள்ளார்,

ஜனநாயகத்தின் மையப் புள்ளியாக திகழும் நாடாளுமன்றத்தில், அமித் ஷா தனது அவதூறு கருத்துக்களால் பாபாசாகேப் அம்பேத்கரைக் களங்கப்படுத்தியுள்ளார். இது பாஜகவின் ஜாதிவெறி மற்றும் தலித் எதிர்ப்பு மனநிலையை அப்பட்டமாக வெளிக்காட்டுகிறது. இது நமக்குப் புதிதன்று. "ஆர்.எஸ். எஸ். தலைவர் எம்.எஸ். கோல்வால்கரும் அரசமைப்புச் சட்டம், தேசியக் கொடி, அதில் உள்ள அசோக சக்கரம் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்தார். 1949 டிசம்பர் 11 ஆம் தேதி டாக்டர் அம்பேத்கர் கொண்டுவந்த இந்து தொகுப்பு சீர்திருத்தச் சட்டத்தை எதிர்த்து ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நாடு முழுவதும் 79 கண்டனக் கூட்டங்களை நடத்தி, தலைநகர் டெல்லியில் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக மிகப்பெரிய கண்டனப் பேரணி நடத்தி, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், பிரதமர் நேரு ஆகியோரது உருவ பொம்மைகளை கொளுத்தியதை எவரும் மறந்திட இயலாது. அதன் தொடர்ச்சியாகத்தான் தனது மூல அமைப்பான ஆர்.எஸ்.எஸ். - இன் அடிநீரோட்டமாக என்றும் ஓடிக் கொண்டிருக்கும் கருத்துகளை எரிச்சல் மிகுதியால் வெளிப்படுத்தி இருக்கிறார் அமித்ஷா. பாஜகவின் சித்தாந்தமே அம்பேத்கருக்கு எதிரானது. அம்பேத்கர் அரும்பாடுபட்டு உருவாக்கிய அரசியல் சாசனத்தை ஒழித்துக் கட்டுவதுதான் பாஜகவின் திட்டம். ஒட்டுமொத்த இந்திய தேசமும் இதனை நன்றாகவே உணர்ந்துள்ளது. மனுதர்மத்தை (மனுஸ்மிருதியை) ஏற்கக் கூடியவர்களுக்கு அம்பேத்கர் எரிச்சலூட்டக் கூடிய ஒவ்வாமையாகத்தான் இருப்பார்.

அரசியல் சாசனத்துக்கு எதிரான கருத்துகளை அமித்ஷா பேசியிருக்கிறார்.

இந்திய தேசம் முழுக்க பல கோடி மக்களால் கொண்டாடப்படும் புரட்சியாளர் அம்பேத்கருக்கு எதிரான இந்தக் கருத்திற்கு நாடு முழுக்கக் கடுமையான எதிர்ப்பு எழுந்துள்ளது. நாடாளுமன்றத்தை இந்தியா கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடக்கி இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் திமுக, திராவிடர் கழகம் உள்ளிட்ட பெரியாரிய, அம்பேத்கரிய, இடதுசாரி அமைப்புகள் போராட்டத்தைக் கையில் எடுத்திருக்கிறது. நாடு முழுவதும் உள்ள தலைவர்கள் அமித்ஷாவுக்கு எதிரான தங்களது கண்டனக் கருத்துக்களைப் பதிய வைத்து வரும் நிலையில் "நான் அப்படியாக பேசவில்லை. காங்கிரஸ் எனது கருத்தைத் திரித்து வெளியிட்டு இருக்கிறது" என்று தனது கருத்திலிருந்து அமிர்ஷா பின்வாங்கி இருப்பதும், -”நாங்களும் அம்பேத்கரை மதிக்கிறோம் காங்கிரஸ் கட்சியின் கடந்த கால செயல்பாடுகள் பற்றி தான் அமித்ஷா பேசினார் " என்று பிரதமர் நரேந்திர மோடி பேசி இருப்பதும் அவர்களது இரட்டை வேடத்தை மீண்டும் அம்பலப்படுத்தி இருக்கிறது.

அம்பேத்கர் அம்பேத்கர் என்று முழங்கும் எங்களுக்கு அமித்ஷா சொல்வது போல சொர்க்கம் நரகத்தில் நம்பிக்கை இல்லை. ஆனால் இன்றைக்கு அமித்ஷாவின் இந்த எதிர்மறைப் பிரச்சாரத்தின் விளைவாக அம்பேத்கர் மீண்டும் விஸ்வரூபம் எடுத்திருக்கிறார்.

அம்பேத்கரின் தலைமையில் உருவான அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் உள்ள சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவ கொள்கைகளை மோடி அமித்ஷா கும்பலிடம் இருந்து பாதுகாக்க அரசமைப்புச் சட்ட நெறியைச் செயல்படுத்த ஜனநாயக சக்திகள் கைகோர்க்க வேண்டிய உடனடித் தேவையை அமித்சாவின் செய்கை உணர்த்தி தெளிவுபடுத்தி இருக்கிறது.


●

# மாநில உரிமை
# இறுதிப் பேருரையின் மையப் புள்ளி

**வெற்றிச்செல்வன்**

தந்தை பெரியார் 19.12.1973 அன்று ஆற்றிய இறுதிப் பேருரை அவரது மரண சாசனமாகக் கருதப்படுகிறது. சென்னை தியாகராய நகரில் நடந்த தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாட்டின் தீர்மானத்தை விளக்குவதற்கான கூட்டத்தில் இவ்வுரை ஆற்றப்பட்டது.

தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாடு பெரியார் திடலில் 1973ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 8, 9 ஆகிய நாட்களில் நடைபெற்றது. மேற்படி மாநாட்டின் தீர்மானங்கள் 09.12.1973 நாளிட்ட விடுதலை இதழில் வெளியிடப்பட்டுள்ளன. “தமிழர் சமுதாய இழிவை ஒழித்திட அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்”, “டில்லி அரசு மறுக்குமானால் இந்த ஆட்சியின்கீழ் நாங்கள் குடிமகனாக இருக்கமாட்டோம்” என்ற தலைப்புகளுடன் மாநாட்டின் தீர்மானங்கள் வெளியிடப்பட்டன.



இந்தத் தீர்மானங்களில் முதன்மையாகப் பேசப்பட்டிருப்பது ஜாதி, மதத்தைக் காப்பாற்றும் இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதே. இம்மாநாட்டின் இறுதித் தீர்மானம் பின்வருமாறு.

“இந்தியா சுதந்திரம், சுயராஜ்யம் அடைந்ததாகச் சொல்லிக் கொள்ளப்பட்ட நாள்முதல் இன்றுவரை ஜனாதிபதிகள், பிரதமர்கள் போன்ற ஆட்சித் தலைவர்கள் ஒன்று பார்ப்பனர்களாகவும் அன்றி வடநாட்டார்களாகவுமே இருக்கிறார்கள்.

தற்போதுள்ள பார்லிமெண்டு அமைப்பில் வடநாட்டு உத்திரப்பிரதேச இந்தியாளர்கள்தான் பிரதமர்களாக வாய்ப்பு இருக்கிறது. இதனை மாற்றி தேச நிர்வாகத் தலைமை ஒவ்வொரு மாநிலத்தவருக்கும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கேற்ப அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்”.

தந்தை பெரியார் இறந்து அம்பது ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் நிலைமை மாறவில்லை. தென்னாட்டில் இருந்து தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட தலைவர்கள் யாரும் இதுவரை பிரதமராகவில்லை. தென்னிந்தியா முழுவதிலும் வாக்களிக்காவிட்டாலும், வடமாநிலங்களில் பெறுகின்ற வாக்குகளைக் கொண்டே ஒரு கட்சி ஆட்சியமைக்க முடியும். இதற்குப் பெயர்தான் ஜனநாயகமா? இதிலிருந்தே பெரியார் கேட்ட கேள்வியின் நியாயம் விளங்குகிறது அல்லவா? இந்தத் தீர்மானத்தின் பல்வேறு அம்சங்கள் பெரியாரின் இறுதிப் பேருரையில் வெளிப்படுகின்றன என்பது அவ்வுரையை ஊன்றிப் படிப்பவர்களுக்குப் புரியும்.

”நீ போப்பா வெளியே, உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நீ 2000 மைல், 1500 மைல் தூரத்திலே இருக்கிறாய்; உன் பேச்சு எனக்குப் புரியாது, என் பேச்சு உனக்குப் புரியாது; உன் பழக்கம் வேறே, உன் வழக்கம் வேறே……….. என்னத்துக்காக இவ்வளவு தூரத்திலே இருக்கிறவன் எங்களுக்கு இராஜாவாகணும்? நீ இல்லாவிட்டால் எங்களுக்கு என்ன நஷ்டம் ?” என்று தனது இறுதி உரையில் கேட்டவர் பெரியார். பெரியாரின் ஒவ்வொரு சொல்லிலும் வடவர் ஆதிக்க எதிர்ப்பு வெளிப்படுகிறது. மாநிலத்திற்கான உரிமைக் கோரிக்கை புலப்படுகிறது.

கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் சூத்திரன் என்ற இழிவு நம் மீது சுமத்தப்பட்டதை பல இடங்களில் வலியுறுத்திக் கூறும் பெரியார், ஜாதியை ஒழிப்பதற்கு நாம் எடுக்கும் முயற்சிகளும் சட்டத்தின் மூலம் நிறுத்தப்பட்டு விடுகிறதே என்றார். அதனால்தான், தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாட்டிலே, ”அரசியல் அமைப்புச் சட்டத்தில் தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்பதற்குப் பதிலாக ஜாதி ஒழிக்கப்பட்டு விட்டது என்ற திருத்தம் கொண்டு வரவேண்டும் என்கிறார்.

அப்போது கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது, அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்று கொண்டு வரப்பட்ட சட்டத்தைப் பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றம்வரை சென்று தடுத்து நிறுத்தி விட்டதைச் சுட்டிக் காட்டி பேசிய பெரியார், சாஸ்திரத்தின் பேரால், இந்து என்கிற மதத்தின் பெயரால், கலைஞர் கொண்டு வந்த சட்டத்தை நிறுத்தி விட்டார்கள் என்கிறார். அதனால்தான் அரசியலமைப்பில் ஜாதியைப் பாதுகாக்கும், மதத்தைப் பாதுகாக்கும் சட்டப் பிரிவுகள் திருத்தப்பட வேண்டும் என்று மாநாட்டிலும் தீர்மானம் நிறைவேற்றுகிறார்.

அரசியல் அதிகாரம் ஒன்றிய அரசிடம் இருக்கும் வரையில், ஒன்றிய அரசு ஜாதி ஒழிய வேண்டும் என்று

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## பெரியாரே தீர்வு..!

அண்மையில் திருவில்லிபுத்தூரில் உள்ள ஆண்டாள் கோயிலுக்குச் சென்ற இசைஞானி இளையராஜாவிற்கு நேர்ந்துள்ள அவமதிப்பு உலகெங்கும் வாழும் தமிழர்களைக் கொதிப்படையச் செய்துள்ளது. அவரைக் கோயிலின் அர்த்த மண்டபத்திற்குள் நுழைய விடாமல் மறுத்து வெளியே அனுப்பி உள்ளார் ஜீயர் ஒருவர். இந்நிகழ்வைத் தனி ஒருவருக்கு நேர்ந்த அவமதிப்பாக இல்லாமல், பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு நேர்ந்த அவமதிப்பாகவே கருத வேண்டியுள்ளது.

கோயிலுக்கு அடித்தளம் அமைத்ததில் தொடங்கி, கருவறைக்குள் கடவுளர் சிலை வரைக்கும் அமைத்துத் தருவது பார்ப்பனர் அல்லாதார்களே. கடைசியாக அனைத்திற்கும் தீட்டுக் கழித்து விட்டு பார்ப்பனர்கள் மற்றவர்களுக்கு அனுமதி மறுப்பது என்ன நியாயம்?

இன்று வரைக்கும் ஜாதியைப் பாதுகாக்கும் நிறுவனமாகத் தானே கோயில் கருவறை உள்ளது. ஆனால் இவற்றுக்கான பாதுகாப்பையோ அரசியலமைப்புச் சட்டம் ஏற்படுத்துக் கொடுத்துள்ளது. Customs எனப்படும் பழக்க வழக்கங்களைப் பாதுகாக்கும் பிரிவுகள் அரசியலமைப்பில் இருப்பதால்தானே இச்சட்டம் ஜாதியைப் பாதுகாக்கும் சட்டம் என்று தந்தை பெரியார் அப்பிரிவுகளை நீக்குவதற்கான போராட்டத்தை முன்னெடுத்தார்.

"ஆட்சியில் எல்லா மக்களுக்கும் நீதியும், சுதந்திரமும், சமத்துவமும், சகோதரத்துவமும் வழங்குவது என்பதாகச் சொல்லிக் கொண்டு மக்களில் ஒருவருக்கொருவர் பெருமையும், இழிவும், சுகமும், கஷ்டமும் உள்ளதான தன்மையுள்ள சாதி, மத, பழக்க வழக்க கலாச்சார உரிமை மக்களுக்கு ஏற்பாடு செய்து வழங்கப்பட்டிருக்கும் அரசியல் சட்டமானது போலித்தன்மையும் புரட்டு மோசடியுமானதாகுமென்று இம்மாநாடு கருதுகின்றது" (விடுதலை, 05.11.1957) என்று தஞ்சையில் மாநாடு கூட்டித் தீர்மானம் நிறைவேற்றினார் பெரியார். ஆனால் இன்றும் அப்பிரிவுகளைக் காரணம் காட்டி, கோயில் நுழைவு முதல் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் பிரச்சினை வரை பார்ப்பனியம் காப்பாற்றப்பட்டு வருகிறது.

அரசியலமைப்பில் ஜாதியை, பழக்க வழக்கங்களைப் பாதுகாக்குக் பிரிவுகளை வைத்துக் கொண்டு, எத்தனை சட்டம் வந்தாலும் இளையராஜா கருவறைக்குள் அல்ல, அர்த்த மண்டபத்திற்குள்ளும் நுழைய முடியாது. ஜாதியும் ஒழியாது. அரசியலமைப்பின் அந்தப் பிரிவுகளை நீக்குவதே ஒரே வழி. பெரியாரே தீர்வு.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408




## முன்பக்கத் தொடர்ச்சி...

நினைக்கும் வரையில் இந்த மாற்றங்களை நடைமுறைப்படுத்துமா? அதனால்தான் எங்களைத் தனியாகப் பிரித்துக் கொடுத்து விடுங்கள் என்று கேட்டார். இன்று கல்வி பொதுப் பட்டியலுக்குக் கொண்டு செல்லப்பட்டு, நீட் தேர்வு நுழைக்கப்படுவதில் இருந்து, தமிழர்களின் வேலைவாய்ப்பு வடவர்களால் பறிக்கப்படுவதுவரை அனைத்தும் எதன் பெயரால் நடக்கிறது? அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆவது எதனால் தடுக்கப்படுகிறது? அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஜாதியைப் பாதுகாக்கும் பிரிவுகள் இடம்பெற்றிருப்பதால்தானே? ஒன்றிய அரசுக்கு அரசியல் அமைப்புச் சட்டம் அளித்திருக்கும் அளவு கடந்த அதிகாரத்தினால்தானே? அந்த அதிகாரத்தைக் கேள்வி கேட்பதுதானே சரியான பாதை. அந்தப் பாதையை, நாம் செல்ல வேண்டிய திசைவழியைக் காட்டிச் சென்றவர் பெரியார். அவ்வழியில் நாம் அனைவரும் நடப்பதே பெரியார் நமக்கு இட்டுச் சென்ற பணியை நிறைவேற்றுவதற்கான வழிமுறை.

(தந்தை பெரியாரின் 51வது நினைவு நாள், 25.12.2024)

●